பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 23 சித்திரை 18 ஆகிர் 14 இதழ் 80
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-4-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-4-30
PERIODICALS DIVISION
LIBRARY & STAFF

கூட்டணிக்கட்டுப்பாட்டிலுள்ள

## 23 தொழிற்சங்கங்களின் ஊர்வலமும் கூட்டமும்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலுள்ள, 23 தொழிற்சங்கங்களின் மேதினக் கொண்டாட்டங்கள் இம்முறை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாண எம். பி திரு வெ யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது

மேதின ஊர்வலம் கொக்குவில் சந்தியிலிருந்து, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பியுமான திரு. எம் சிவசிதம்பரம் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

# ஈரான் வெளிநாட்டு அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினர்!

## 12 தடவை துப்பாக்கிச்சூடு; குவைத்தில் சம்பவம்!

(குவைத்)

**குவைத் நாட்டுக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்த ஈரானிய வெளிநாட்டமைச்சர் ஜனுப்குதூப் சாதிக்கை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினர்!**

அரபு நாடுகளில் சுற்றுவிஜயமொன்றை மேற்கொண்ட ஈரானிய வெளிநாட்டமைச்சர்; சிரியா, லெபனன் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு நேற்று முன்தினமிரவு குவைத் வந்து சேர்ந்தார்.

குவைத் விமான நிலையத்திலிருந்து நகரை நோக்கி மோட்டார் பவனியில் அவர் சென்று கொண்டிருந்த போது, அவரை நோக்கி பன்னிரண்டு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது ஆனாலும் அவர்மீதோ அல்லது பாதுகாப்பாளர் மீதோ துப்பாக்கிச் சூடு எதுவுமே படவில்லை என்று குவைத் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

ஈரானிய வெளிநாட்டமைச்சர் பிரயாணம்செய்த மோட்டார்கார் மீது சரமாரியாகப் பொழியப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களிலிருந்து அவர் தப்பியது அதிசயமானதொரு சம்பவம் என்று குவைத் நகர பொலிஸ் உயர் அதிகாரி நேற்றிரவு தெரிவித்தார். இது சம்பந்தமாக நேற்றிரவு வரை எவரும் கைதுசெய்யப் படவில்லை.

## தமிழ்நாட்டில் 8 கட்சிகள்; 12 கட்சிகள் கூட்டணிகள்!

### அ.இ. அ.தி. மு,க.பட்டியல்வெளியானது

[சென்னை]

அடுத்த மாதம் நடைபெறும் தமிழக சட்ட சபை தேர்தலில் போட்டியிடும், அ இ அ தி மு கழகத்தின் வேட்பாளர்களின் முதல் பட்டியல் நேற்று மாலை வெளியிடப்பட்டது. இரண்டாவது இறுதிப்பட்டியல் நேற்று இரவு வெளிவரவிருந்தது.

முன்னாள் முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் தலைமையில், பன்னிரண்டுகட்சிகள் கூட்டணி உருவாகியுள்ளது.

தி மு க-இ காங்கிரஸ் தலைமையில், எட்டுக்கட்சிகளைக் கொண்ட கூட்டணி உருவாகியிருக்கிறது.

அ இ அ தி மு கழகத்தின் முதல் பட்டியலின்படி, 47 பேர் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களாகும் ஏழுபேர் முன்னாள் தமிழக அமைச்சர்கள் ஒருவர் பெண். இரண்டாவது பட்டியலில் திரு எம் ஜி ராமச்சந்திரனின் பெயர் இடம் பெற்றுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. யின்

## 'ஜீப்' தாக்கப்பட்டது குறித்து பொலிசார் தீவிரவிசாரணை

### இளைஞர்கள் தேடப்படுகின்றனர்

(நெல்லியடி)

உடுப்பிட்டி எம். பி. திரு த. இராஜலிங்கத்தின் 'ஜீப்' வண்டி கடந்த சனிக்கிழமை இரவு வல்லைவெளியில் வைத்து தாக்கப்பட்டது சம்பந்தமாக, காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நேரடி விசாரணைமேற்கொண்டுள்ளார்

உடுப்பிட்டி எம் பி. திரு. த. இராஜலிங்கத்தின் 'ஜீப்' வண்டி சேதப்படுத்தப்பட்ட செய்தியை அறிந்து அதிர்ச்சி அடைந்த கூட்டணி எம். பிக்கள் அவரது இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறினர்.

யாழ் நகரில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவாலயத் திறப்புவிழாவில் கலந்து கொண்டுவிட்டு உடுப்பிட்டியிலுள்ள தனது இல்லத்திற்குச் சென்றுகொண்டிருந்த போது வல்லைவெளியில் வைத்து நான்கு இளைஞர்கள் வீதிக்குக் குறுக்காக மரக்கட்டையைப் போட்டு ஜீப் வண்டியை மறித்து அதனைச் சேதப்படுத்தியதுடன் எம். பி யையும் பயமுறுத்திவிட்டு எம். பி யின் மனைவியையும் பிள்ளைகளையும் தூஷித்தனராம்.

இச்சம்பவம் பற்றிப் புலன் விசாரணையில் ஈடுபட்ட வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உடுகம்பல சம்பவம் நடைபெற்ற இடத்தில் கைக்குண்டு ஒன்று இருந்ததைக் கண்டுபிடித்தார். ஜீப் வண்டிக்கு வீசப்பட்டதாகக் கூறப்படும் கைக்குண்டு களைக் கண்டெடுத்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், விஷமச் செயலில் ஈடுபட்ட நான்கு இளைஞர்களையும் தேடிவலைவிரித்துள்ளார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ விஜயக்கோன் ஞாயிற்றுக்கிழமை இரவு உடுப்பிட்டி எம். பி.யைச் சந்தித்து விசாரணையை மேற்கொண்டார்.

ஜீப் வண்டி சேதப்படுத்தப்பட்டதை அறிந்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், யாழ். எம். பி, திரு. வெ. யோகேஸ்வரன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் உடுப்பிட்டி எம். பி. யின் இல்லத்திற்குச் சென்று இவருக்கு ஆறுதல் கூறினர். எம். பி.யின் ஆதரவாளர்களும் நேரில் சென்று ஆறுதல் கூறி வருகின்றனர்

## லூதர் செல்வராஜா காலமானர்

[யாழ்ப்பாணம்]

பிரபல சமூக சேவையாளரும், சிறந்த நிர்வாகியுமான திரு. லூதர் ஜேம்ஸ் செல்வராஜா, தனது ஐம்பதாவது வயதில் நேற்று முன்தினமிரவு காலமானர்!

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளரும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் உபதலைவரும், சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவரும், முன்னாள் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியருமான திரு. லூதர் செல்வராஜா, நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற டென்னிஸ் ஆட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டபோது திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால், சிறிது நேரத்தில் காலமானர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விலங்கியல் விரிவுரையாளர் திருமதி நவமணியின் கணவரும், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் பேராசிரியர் ஜெயசிங்கத்தின் சகோதரருமான திரு. லூதர் செல்வராஜா, யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்காக பலமுன்னேடித் திட்டங்களை வகுத்து செயல்படுவதற்கு மூலகர்த்தாவாக விருந்ததுடன், இம் மாவட்டத்தின் விவசாய, கைத்தொழில் அபிவிருத்திக்காகவும் பெருந்தொண்டாற்றியவர்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, நல்லடக்கம் ஏழாலையிலுள்ள குடும்ப மயானத்தில் இன்று மாலை நடைபெறும்.

## "எதிர்ப்புகளைக் கண்டு தமிழினம் தளராது"

[யாழ்ப்பாணம்]

"சிறிய நினைவுச் சின்னங்கள் தொடர்ந்து உடைக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் 80 அடி உயரத்தில் பெரிய நினைவுச் சின்னம் அமைத்துள்ளோம். உடைப்புகளைக் கண்டோ எதிர்ப்புகளைக் கண்டோ தமிழினம் தளராது செயல்படுகிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது"

இவ்வாறு தந்தை செல்வா அறங்காவல்குழு இணைச் செயலாளர் திரு ஈழவேந்தன், செல்வா நினைவாலய திறப்பு விழாவின் இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்ற கலைவாணர் வில்லிசைக் குழுவினரின் "செல்வா பிறந்திலரேல்" என்ற நிகழ்ச்சிக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

விடுதலை இயக்கத்தில் ஏற்பட்டுள்ள தொய்வினைக்கூட நாசூக்காக குறிப்பிட்டு எம் சிந்தனையை வில்லிசை மூலம் குழுவினர் கவர்ந்துள்ளனர்.

"தந்தை செல்வா எம்மினத்தை வழி நடத்த நல்ல அமுதினை விட்டுச் சென்றுள்ளார் அந்த அமுது தொடர்ந்தும் நல்லமுதாக இருக்க கதிர் வீச்சுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்."

(கு)

## தமிழாசிரியர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியினரால் நடாத்தப்படும் மேதினக் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியுடன் சேர்ந்து மே தினத்தைக் கொண்டாடுவதென்று சங்கம் தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்திற்கு [illegible] சேர்ந்த சகல உறுப்பினர்களையும் மேதினக்கூட்டத்திலும்

(8-ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் 26 ஸ்ரீ 3483 டாட்டா பென்ஸ் லொறி விற்பனைக்கு உண்டு. க. சிவபாதசுந்தரமூர்த்தி, நவக்கிரி புத்தூர். 5600

### தேவை

பெண் எழுதுவினைஞர் (Clerk) தேவை. விபரங்களுடன் 3-5-80ந் திகதிக்கு முதல் விண்ணப்பிக்குக. விக்னு டியூசன் சென்ரர் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5598

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழிலை எதிர்பார்ப்பவர்களே! பாடசாலையால் வெளியேறிய மாணவர்களே! ஆறுமாதகாலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் கூடிய புதிய வகுப்புக்கள் 1-5-80ல் ஆரம்பம். எலெக்றிக் வயறிங், வெல்டிங், மோட்டோர் மெக்கானிசம் ஆகியவற்றில் பகல், மாலை, வார இறுதி வகுப்புகள் நடைபெறவுள்ளன. விபரங்கட்கு, Patrician Industrial Institute, 59, St. Patricks Rd, Jaffna. 5479

### வாடகைக்கு

கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். ராஜன் பொன்னம்பலம், சக்தி ஸ்ருடியோ, கண்டி ரோட், கிளிநொச்சி. 5621

### கமிஷனுக்கு

சகல வசதியுற்ற இடம் கொமிஷன் அடிப்படையில் வழங்கப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்க; கிளிநொச்சி ஏஜென்சி, கண்டி வீதி, கிளிநொச்சி. 5620

## சிறிய நீர்ப்பாசன வேலை ஒப்பந்தக்காரர் பதிவுசெய்தல்

**கமநலச்சேவை இலாகா, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் கமநலச்சேவை இலாகா மேற்கொள்ளும் சிறிய நீர்ப்பாசன வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்யத்தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களை பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேறு திணைக்களங்களினால் வழங்கப்பட்ட பதிவுப் புத்தகங்கள், அனுபவம் பற்றிய சான்றிதழ்கள், சொத்து வருமான பெறுமதியினை உதவி அரசாங்க அதிபர் சிபாரிசு செய்யும் கடிதங்கள் என்பவற்றினை எனது காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் சமர்ப்பித்து 15-05-1980ம் திகதி வரை பதிவுசெய்து கொள்ளலாம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் எனது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

க. பரமலிங்கம்,
கமநலச்சேவை
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

கமநலச்சேவை இலாகா,
செயலகம்,
யாழ்ப்பாணம். 5622

## மத்தியகிழக்கில் வேலைவாய்ப்பு

# 4 லட்சம் ரூபா மோசடி; நயினாதீவு நபர் கைது

[யாழ்ப்பாணம்]

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, சுமார் நான்கு லட்சம் ரூபாவை மோசடி செய்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்!

கொழும்பு பஞ்சிகாவத்தையில் வசிக்கும் எஸ். என். துரைராசா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நயினாதீவைச் சேர்ந்த இவர் கொழும்பில் வசிப்பதாகவும் வெளிநாடுகளில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எண்பத்திஐந்து இளைஞர்களிடமும் யுவதிகளிடமிருந்தும் சுமார் நான்கு லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாகவும் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து, யாழ். விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு டி. ஏ. ஜே. டி. குணரத்ன புலன்விசாரணையில் ஈடுபட்டபோது சந்தேகநபர் வேறு பலரிடமும் பண மோசடி செய்துள்ளது தெரியவந்ததாம்.

மேற்படி சந்தேக நபரை மருதானைப் பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். இவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து விசாரணை நடத்தும் முயற்சியில் யாழ்ப்பாணம் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். [கொ]

## பிரசவ விடுதி விரைவில் திறக்கப்படும்

[பண்டத்தரிப்பு]

கொண்டாவில் அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு அருகாமையில் ஒரு லட்சத்து 92 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பிரசவ விடுதியின் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

மின்சார இணைப்பு வேலைகள் முடிவடைந்ததும் இப்பிரசவ விடுதி திறந்துவைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு)

## Shanthi Cinema, Jaffna

Notice was published in the EELANAADU of 9-4-80 by Mr. S. Logeswaran, Attorney-at-Law on behalf of Mr. K. Perampalam of 68/1, Brown Road, Jaffna asking Court for the winding up of Shanthi Films Ltd, Jaffna.

The case was heard on 25-4-80 at the District Court, Jaffna and the action was dismissed.

Mr. K. Perampalam has been asked by the Court to pay Shanthi Films Ltd., the cost incurred by them in the action.

This is for the information of the public.

ROBIN TAMPOE
Managing Director
Shanthi Films Ltd.


5619

## ஓராண்டு நிறைவு

**சதாசிவம் நாகலிங்கம்**

(Retired Bridge Inspector — C. G. R)

தோற்றம்: 2-10-1906 மறைவு: 30-4-1979



எமையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டு இறைவனுடன் இரண்டறக் கலந்து ஓராண்டு எய்திய போதிலும், உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு ஒரு போதும் அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும் அன்பு

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"ஜெயகிரி"
76, அரசடி வீதி,
5623 யாழ்ப்பாணம்.

## விவசாயிகளே!

### மிளகாய் குருமன் (இலேச்சுருள்) நோய் விளைச்சலைக் குறைக்கின்றதா?

### உடனே பாவியுங்கள்!!



# ஜேகெம் சல்பர் 80%

(நீரில் கரையும் 80% கெந்தகம்)

## இது ஒரு மேற்குஜேர்மனித் தயாரிப்பாகும்

கலவை: 30 மி/லீற் பரத்தியன் 6/3 உடன் 180 கிறும் ஜேகெம் சல்பர் 80% 54 லீற்றர் நீரில்கலந்து தெளிக்கவும்.

(1 அவுன்ஸ் பரத்தியன் 6/3 உடன் 6 அவுன்ஸ் கெந்தகம் 12 கலன் நீரில்)

### 500 கிராம் பைக்கட் ரூபா 10-00 மட்டுமே

ஏக விநியோகஸ்தர்கள்:
**ஜேகெம்,**
39, பிறிஸ்டல் பில்டிங்,
51, யோர்க் வீதி, கொழும்பு-1,
தொலைபேசி: 24353

கிடைக்குமிடம்:
**அக்றேஸ் லிமிடெட்.**
59, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

## சாந்தி சினிமா

**யாழ்ப்பாணம்.**

### இத்தால் பொதுமக்கள் அறியவேண்டியது

யாழ்ப்பாணம் சாந்தி பிலிம்ஸ் ஸ்தாபனத்தைக் கலைக்கும்படி கோரி, யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 68/1-ம் இலக்கத்திலுள்ள திரு க பேரம்பலம் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் அவர்களால் கடந்த 9-4-80ல் 'ஈழநாடு' பிரசுரத்தில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு 25-4-80ல் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுத்தள்ளுபடி செய்யப்பட்டதோடு சாந்தி பிலிம்ஸ் ஸ்தாபனத்துக்குக் குறித்த பேரம்பலம் அவர்கள் செலவுதொகை கட்டவேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

றொபின் தம்பு,
நிர்வாக இயக்குநர்,
சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

26-4-80 5618

## மரண அறிவித்தல்

**லூதர் ஜேம்ஸ் செல்வராஜா**

லூதர் ஜேம்ஸ் செல்வராஜா காலமானார். இவர், நவமணியின் (விரிவுரையாளர்-யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) அன்புக் கணவராவார். அன்னாரின் பூதவுடல் இன்று [30-4-80] பிற்பகல் மூன்று மணிக்கு, யாழ்ப்பாணம் 80, [illegible] லூரி ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக [illegible] குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

5624

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிராமங்களின் மூலவளங்களைப் பயன்படுத்தி மனிதசக்தி விரயத்தைத் தவிர்க்கலாம்"

--கனகசூரியர்

(யாழ்ப்பாணம்) வேலையற்ற இளைஞர்களுக்கு அவர்களின் தகைமைகளுக்கும் ஆற்றலுக்கும் ஏற்பக் கைத்தொழிற் பயிற்சியையளித்து, அப்பயிற்சி மூலம் கிராமப் புறங்களில் இருக்கும் மூலப் பொருட்கள் யாவற்றையும் பயன்படுத்தி, உற்பத்தியில் ஈடுபட்டால் வீண் விரயமாகும் மனித சக்தி நாட்டு அபிவிருத்திக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய பலம்சுபாறாள் அபிவிருத்திச் சபைத் தலைவரும், ஆசிய இளைஞர் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் இயக்குநர் நாயகமுமான திரு. என். கனகசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு கனகசூரியர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இளைஞர்களின் சக்திகளையும், ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்தி அவர்களின் மத்தியிலே பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களுக்கு இளைஞர்களின் முழுப் பொறுப்புணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டிக் கிராமிய அபிவிருத்தியில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டால் நமது நாட்டை மிகச் சுலபமாகவும் துரிதமாகவும் அபிவிருத்தியடையச் செய்யலாம்.



கிராம அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்கே வித்தாகும். அபிவிருத்தியின் வெற்றி நம் இளைஞர்களின் கையிலேயே உள்ளது. இளைஞர்களின் வீரத்திலும் அவர்களின் விடா முயற்சியிலும் இலட்சியத்திலும் தான் நம் நாட்டு அபிவிருத்தி வேரூன்றி நிற்கிறது.

உற்பத்திப் பெருக்கமின்றி எந்த நாடும் தன்னை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இவ்வகையில் பொருட்களின் உற்பத்தி அபிவிருத்தி இரண்டிலுமே கவனம் செலுத்துவது அவசியமாகும். கிராமிய உற்பத்திகளைப் பெருக்கும் அதேவேளையில் உற்பத்திப் பொருட்களின் தரத்தை அபிவிருத்திசெய்வதற்கும் கரிசனை செலுத்தினால் தான் நாட்டு அபிவிருத்தி பலனுள்ளதாகும். வளர்ந்து வரும் ஒரு நாட்டின் அபிவிருத்தி வேலைகள் அந்நாட்டின் இயற்கை வளங்களைக் கூடுதலாகப் பாவிப்பதன் மூலமே வெற்றியைத் தரும்.

## போக்குவரத்து

கிராம அபிவிருத்திக்கு இன்றியமையாதது சிறந்த போக்குவரத்து வசதிகளாகும். கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து வசதிகள் அதிகமாகத் தேவைப்படுகிறது. உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்தவும், உற்பத்திக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டுவரவும் போக்குவரத்து வசதிகள் வேண்டும். கிராம அபிவிருத்தி ... அபிவிருத்தியில் ஈடுபடுவோர்களைக் கிராமப்புறத்திலிருந்து வெளியிடங்களுக்கும் வெளியிடங்களிலிருந்து கிராமப்புறங்களுக்கும் கொண்டுசெல்ல போதிய வசதிகள் செய்யப்படவேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கெடுப்பது கிராமப்புறங்களில் காணப்படும் பாவிக்கப்படாத நிலங்களே. பாவிக்கப்படாத நிலங்களில் கால்நடை வளர்ப்பு, மந்தைவளர்ப்பு, பாற்பண்ணைத் திட்டங்களை போன்ற திட்டங்களை உருவாக்கி, கிராமிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்தலாம். கால்நடை வளர்ப்பு, பால், இறைச்சி போன்ற உணவைத் தருவது மல்லாமல் விவசாயத்துக்குப் போதுமான பசளைப் பொருட்களையும் தரக்கூடியதாக இருக்கின்றது. இதைவிட மாட்டுச் சாணம் எரிபொருளை உண்டாக்குவதற்கு உதவுகின்றது. இறைச்சியை தகரத்தில் அடைத்து வெளிநாட்டுக்கு அனுப்புவதன்மூலம் பெருந்தொகையான அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கலாம். ஆட்டு வளர்ப்பையும் ஊக்குவித்து நல்ல மாதிரியான முறையில் கிராமிய அபிவிருத்தி மூலம் நம் நாட்டுத் தேசியச் செல்வத்தை அதிகரிக்கலாம்.

## குடியேற்றத் திட்டங்களும் விவசாயமும்

நாட்டு அபிவிருத்திக்குக் குடியேற்றத்திட்டங்கள் வலுப்படுத்தக் கூடியதை பட்டணத்திலிருக்கும் சனநெருக்கடியைத் தளர்த்தும் நேரத்தில் குடியேற்றத்திட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. நாட்டுக்கு வேண்டிய உணவு உற்பத்தியைப் பெருக்க புதுப் புது நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கி வேலையற்றோர்க்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் விவசாயத்தை அபிவிருத்திசெய்யவும் சாதகமாக இருக்கின்றது. குளங்களை அமைத்து நீர்ப்பாசன வசதிகளைச் ஏற்படுத்தி உணவு தானியங்களை உற்பத்தி செய்தனர் முன்னோர். ஒருகாலத்

(5-ம் பக்கம் பார்க்க)

## கதிரவேல் சுவாமிகள்



... மாணிக்கம் கதிரவேலு சாமியார் இன்று எம்முடன் இல்லை என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. அன்னாரின் சிவக்கோலம், தொண்டுமனப்பான்மை, ஞானஒளி இவையெல்லாம் என் கண்முன்னே தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. 19-4-1910-ல் வாழப்பிறந்த பெரியார் ஏறக்குறைய 69 ஆண்டுகள்வாழ்ந்து 30-4-79-ல் இறைவனின் திருவடிநிழலை அடைந்தார்.

இவர் சிவயோக சுவாமிகளின் சிஷ்யர்; முருகபக்தர்; பிறமதங்களை மதிக்கும் தன்மை வாய்ந்தவர்; சைவ ஆசாரசீலம் வாய்ந்தவர். காலந்தவறாத கடமையும், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் வன்மையும் பெற்றவர்.

சிவதொண்டன் நிலையத்தாருடன் நெருங்கிய தொடர்புடைய இவர், கட்டிடக்கலையிற் கைதேர்ந்த சிற்பன்னர். இவரிடம் வேலைபயின்றவர்கள் இன்று வரும் உயர்நிலையில் திறமை படைத்து விளங்குகின்றனர். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என்ற ஆன்றோர் வாக்குக்குஇலக்கணமாக வாழ்ந்தவர் எவருக்கும் இன்னல் நினைக்காத பெருமகன்.

நல்லூர் முருகப்பெருமானை எக்காலத்தும் இடையறாதுவழிபட்டு வந்த கதிரவேல் சுவாமிகளுன் சுற்றுடலில் உள்ளவர்கள் அன்னாரின் புத்திமதிக்குப் பெருமதிப்பு அளித்து வந்தார்கள். மேலும் வேலைத்தலவூழியர்கள் இவருடைய அன்புக்குக் கீழ்ப்படிந்து கடமையாற்றி வந்தார்கள்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வாசகியத்திற்கு மதிப்புக் கொடுத்த மகான். இவ்வாறு இம்மையிலும், மறுமையிலும் நற்பேறு பெற்ற மகான்களைக் காண்டலரிது. ஞாலத்தின் ஞானச்சுடராக விளங்கிய நற்பெரியாரின் நாமம் நமக்கெல்லாம் வழிகாட்டும்

இத்தகைய மகான் எத்தனை இன்னலும் இன்றி இன்று சாயுச்சிய நிலையை அடைந்து விட்டார். இவ்வுலகத் தொண்டுகள் நிறைவுற்று அவ்வுலகத்தொண்டிற்கு ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்டார் என்றே கூறலாம்

கே. ரி. சம்பந்தர்
[மாவட்ட காணி அதிகாரி கச்சேரி, யாழ்ப்பாணம்]


# டியுறேல் அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.




பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பீ கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் ... விரும்பும் ... சுவையுடையது.

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது.... அதுவே பலம் வழங்குகிறது.

ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.

சில்லறை விலை 170 மிலி. - ரூ. 13/75

Grant K & E 3254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் மேதின வரலாறு....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இல் மக்கள்சீனுவிலும் இதை அடுத்து ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமரிக்கநாடுகளிலும் மே நாள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்வேளையில் ''உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்று அழைப்பு விடும் இந்நாள் தமிழுக்கு உணர்த்தி நிற்கும் உண்மை யாதென்பதை இங்கு யாம் சிந்திக்க வேண்டும் ஆங்கில மொழியின் சொற் பெருக்கத் திற்குத் துணைநிற்கும் ஒரு சொல் கூலி என்ற தமிழ்ச் சொல்லாகும். இச்சொல் தமிழருக்குப் பெருமையையோ சிறுமையையோ தருகின்றது. என்பது தனி ஆய்விற்குரிய விஷயமாகும் ஆனால் தமிழர் எவரையும் சுரண்டி வாழும் முதலாளிகள் அல்லர் உழைத்து வாழும் உழைப்பாளிகள் என்பதை இக்கூலி என்ற சொல் அனைவருக்கும் அறிவித்தபடி இருக்கின்றது. பீஜி சுமத்திரா, தென்ஆபிரிக்கா பர்மா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் வாழும் தமிழ்த் தொழிலாளர்கள் இக்கூற்றின் உண்மையை உலகிற்குப் பறை சாற்றுகின்றனர் இதனுற்தான் போலும் 'கிரியர்கள்' என்ற ஆய்வாளர் 'தமிழர்' என்றால் உழைப்பாளிகள் என்று பொருள் விளக்கம் தந்துள்ளார்கள்.

## தமிழ் இலக்கியம் இயம்பும் சமத்துவம்

சமத்துவம், சோஷலிசம், கம்யூனிசம் போன்ற பிற மொழிச் சொற்களுக்கு ''ஒப்புரவு'' என்ற தமிழ்ச் சொல்லினுல் தமிழ் கண்ட சமத்துவத்தை வள்ளுவன் உணர்த்துகிருன். ஆகவே சமத்துவக் கோட்பாடு தமிழர்களுக்குப் புதுமையல்ல; இறக்குமதிப் பொருளல்ல என்பது தெளிவு. ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'' என்றும் ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்றும் வள்ளுவன் எழுப்பும் உலகளாவிய கொள்கையும் ''கொள்வார் இல்லாததினுல் கொடுப்பாரும் இல்லை'' என்றும் ''மக்கள் உயிர் — மன்னன் உடல்'' என்றும் கம்பன் கண்ட சமபந்தி உலகு தமிழனின் பரந்த நோக்கிற்குப் பாங்கான சான்றுகளாகும்.

## பாரதியும் பாரதிதாசனும் பகரும் புரட்சி

இவை மட்டுமல்ல 20-ம் நூற்றாண்டின் ''தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதி முழங்க அவனின் தாகம் ''கொலைவாளினை எடடா மிகு கொடுயோர் செயல்அறவே'', என்றுமுழங்கி நிறைவடையாத நிலையில் ''ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உயரப்பராய் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிவிடுவார் உரைப்பாய் நீ'' என்று அடித்துக்கூறிய சொற்கள் தொழிலாளர் நலன் பேணும் பண்பு தமிழ்மக்களில் ஊறிக்கிடக்கும் பண்பு என்பதைப் பறைசாற்றிக்கிடக்கின்றன.

## தமிழரின் தொழிற்சங்கப் பணி

இனி இந்தியத் துணைக்கண்டத்திலும் இலங்கை மண்ணிலும் தோன்றிய தொழிற்சங்க இயக்க வரலாற்றினை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அங்கும் தமிழர் பணி தலைதூக்கி நிற்பதைக் கண்டு பெருமிதமும் பேருவகையும் எய்தலாம். 1918ம் ஆண்டு ஏப்ரல் 28ல் இந்தியாவில் முதன்முதல் தொழிற்சங்க இயக்கத்தைத் தொடக்கிய பெருமை திரு. வி. க., திரு. கேசவப்பிள்ளை, திரு. செல்லபசுபதிச்செட்டியார், வ. உ. சி. ஆகியோரையே சாரும் என்பதை அறியக்கூடியதாய் இருக்கின்றது

## ஈழத்தில் தொழிற்சங்க வளர்ச்சி

ஈழத்தில் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தை சேர் பொன் அருணுசலமே என்று அவரின் நூற்றாண்டு நினைவு விழாவின்போது சில காலத்திற்கு முன்பு திரு. பீற்றர் கெனமன் வானெலியில் நிகழ்த்திய உரையொன்றில் கூறியுள்ளார். இவ்வுரை வெறும் வெற்றுரையல்ல. மாருக வரலாற்றில் இடம்பெறும் மறுக்க முடியாத உண்மையாகும். மற்றும்கே. சி. நித்தியானந்தா, திரு. வைகுந்தவாசன். திரு. ஆசீர்வாதம், திரு. நடேசஐயர், திரு. பெரிசுந்தரம், திரு. தொண்டமான், திரு. இராசலிங்கம், திரு. கோடீஸ்வரன் ஆகியோர் ஆற்றிய தொழிற்சங்கப் பணியை யாம் எளிதில் மறக்கமுடியாது. இவை அனைத்திற்கும் மேலாகத் தொழிற்சங்கப் போராட்டத்தில் தன் உயிரையே அர்ப்பணித்த கந்தசாமியை எந்த நன்றியுள்ள தொழிலாளியும் மறக்கமுடியுமா?

ஆனால் ஈழத்தில் நடப்பதென்ன? தொழிற்சங்க இயக்கங்களை வழிநடத்திய தமிழ்த் தலைவர்களையும், தொழிற்சங்க இயக்கத்திற்கும் தொழிலாளர் போராட்டத்திற்கும் தம்மையே அர்ப்பணித்த தமிழ்த் தொழிலாளர்களையும் சிங்கள அரசுகளும், சிங்களத் தொழிற்சங்கவாதிகளும் தமது தேவைக்கேற்ற முறையில் பயன்படுத்திய பின்னர் தூக்கி எறிந்துவிட்டார்கள் இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்கும் மலையகத் தமிழ்த்தொழிலாளரின் நிலையென்ன? அரச நிலைக்களங்களிலும் மற்றும் அவை சார்ந்தவற்றிலும் பணிபுரியும் தமிழ் ஊழியர் நிலையென்ன? ஆகவே இம் மேநாளில் தமிழ்த் தொழிலாளர் ஒவ்வொருவரும் தம் வருங்காலத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

''இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டு எங்கோ பகைவர் ஒடினர்'' என்ற நிலையை உருவாக்க இம் மேநாள் வழி வகுக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

## கட்டாக்காலி மாடுகள் ஏலத்தில் விற்கப்பட்டன

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய், நவாலி ஆகிய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களின் பிரிவுகளில் அத்துமீறி பயிர்களை அழித்துவந்த 6 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டன. [கு]

## மீனவர்...

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

தலைவர்; சி. சிவபாலசிங்கம், உப தலைவர்: வ. மகேசன், செயலாளர்; செ. சத்தியகீர்த்தி, உப-செயலாளர்: ம. அன்ரனி வேதநாயகம், பொருளாளர்: செ. வயிரமுத்து- மூன்று பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஈ)

## மூலவளங்களை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இல் அரிசியை ஏற்றுமதி செய்த நாடுகள் தற்போது சகல உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் நிலையில் கிராம அபிவிருத்தி சீர்குலைந்த நிலையில் இருக்கின்றது. எனவே விவசாயத்தை புதுக்குடியேற்றங்கள் மூலம் விஸ்தரிக்கவேண்டியது அவசியம். மீன்பிடித்தொழிலையும் நவீனப்படுத்தி அபிவிருத்தி செய்வதன் மூலம் நாடுதுரித கதியில் முன்னேறும்.

''அபிவிருத்தித் திட்டங்கள் குளிரூட்டிய அறைகளிலிருந்து உருவாகக் படக்கூடாது. திட்டம் போடுபவர்களும் திட்டங்களினுல் நன்மை பெறக்கூடியவர்களும் ஒன்றிணைந்து அபிவிருத்தித் திட்டங்களை ஆக்கவேண்டும். அபிவிருத்தித் திட்டங்கள் போடுகையில் இளைஞர்கள் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடும் விதத்தில் திட்டங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவர்கள் ஈடுபடக்கூடிய புதிய பொருளாதாரத் திட்டங்கள் பன்முகப் பட்டமுறையில் உருவாக்கப் படல் வேண்டும். திட்டங்களை இனங்கண்டு வகைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். திறம்படச் செய்யத் தேவையான அடிப்படைத் திறன்கள், விசேட திறன்கள், மனப்பாங்குகள், பயிற்சிகள், அனுபவங்கள் முதலியவற்றை வழங்குவனவாகக் கல்விமுறையும், பயிற்சி முறையும் அமைய வேண்டும்''

[உடுப்பிட்டி]

நெல்லியடிப் பட்டின சபை மத்திய நூலகத்தில் பெருமளவு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியன இடம் பெறவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை நெல்லியடிப் பட்டின சபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் மேற்கொண்டு வருகின்ருர். [கு]

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டு அம்மையார் ஐந்து சதம் கொடுத்தாராம். ''சீ இது என்ன பிச்சை! அஞ்சு சதத்தைக் கொண்டுபோய் என்ன செய்யிறது'' என்று சொல்லியபடியே அதை எறிந்துவிட்டுச் சென்ருராம் அவர்.

இன்னெரு பிச்சைக்காரர் தனது சகா ஒருவரிடம், ''இந்தத் தொழிலையே இனி விட்டுவிடப்போகிறேன்'' என்று விரக்தியோடு சொல்லிக் கொண்டிருந்தார்.

''வெள்ளிக்கிழமைகளில் படிபடியாக ஏறி இறங்கினுல் ஒவ்வொரு சதமாகக் கிடைத்தது. அப்படிச் சேரும் பணத்தில் நம்ம செலவுபோக மிச்சமும் இருந்தது. இப்படியேறினுலும் அதே ஒரு சதத்தைத்தான் குடுக்கிருங்கள். சேரும் பணத்தில் எதை வாங்கமுடியும்? காலிதான் வலிக்கிறது''

உண்மைதான்! ஆனல் சதம் சதமாகப் பிச்சை எடுத்தவர்கள் சிலர் வங்கிக் கணக்கு வைத்திருந்ததாகவும் சொந்த வீடு கட்டியிருந்ததாகவும் செய்திகள் வெளிவந்ததுண்டு!

சதம் சதமாகப் பிச்சை எடுத்துப் பாதுகாப்பதற்குக் கொடுத்தவர்களிடம் மொத்தமாகப் பிச்சை எடுத்துக்கொண்டவர்களின் கதைகளும் நிறைய உண்டு!


0 0 0

நமது நாட்டில் ரயிலில் பிரயாணம் செய்வதற்குத் தனித்திறமை வேண்டும் பலவித தேகாப்பியாசங்கள் செய்து பயிற்சி பெற்றிருப்பது அவசியம்! யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் ரயிலில் ஒரு சிறுவன் நுழைந்து செல்வதற்குக்கூட இசைந்து கொடுக்காத நமது பிரயாணிகள் ரயிலில் மேலும் மேலும் கூட்டம் நிரம்பி அசையமுடியாத நிலையிருந்தாலும் சிறிது தூரம் சென்றபின் 'வடை, சோடா, தம்பி' என்ற குரல் கொடுத்து வேகமாக வருபவர்களுக்குமட்டும் எவ்வளவு பயபக்தியோடு இடம் கொடுக்கிருர்கள்!

ஊர்சுற்றி


உருளைக் கிழங்கில் காளான் நோய்களை ஒழிப்பது அன்றக்கோல் 70%.

பயிரை இளம் பருவத்திலும் முதிர் பருவத்திலும் தாக்கும் முன், பின் கூற்று வெளிறல் நோய் பற்றி உருளைக் கிழங்கு பயிரிடுவோர் இனி அஞ்சத் தேவையில்லை. அதற்கு வன்மை வாய்ந்த மருந்தான அன்றக்கோல் பங்கசுநாசினியை உற்பத்தி செய்து தருகிறது ''ப்பாயர்''.
காய்கறி, புகையிலை, திராட்சை, தோட்டை, பழ விருட்சங்கள், வாழை முதலாம் தாவரங்களைப் பாதிக்கும் காளான் நோய்களுக்கும் அன்றக்கோல் சிறந்தது. ஆரோக்கிய வளர்ச்சி, அதிக விளைச்சல், கூடுதல் லாபம் [illegible] அன்றக்கோல்.





உருளைக்கிழங்கைத் தாக்கும் பைட்டோப்தரு என்னும் இங்கே காணும் காளான் நோயை அன்றக்கோல் ஒழிக்கும்.

Mel Ads

BAYER
பயிர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு ''ப்பாயர்'' ஒரு ''ப்பாயர்''–உற்பத்தி.

இலங்கையில் தயாரிப்போர்
ஹேரகம லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை.
கொழும்பு - 10.

500 கிராம்ஸ் - ரூபா 38 - 25 கில்லோ கிராம்ஸ் ரூபா - 1600/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கரின் சடலங்கள் அரசிடம் கையளிக்கப்படா

## ஜெருஸலம் மேற்றிராணியார் பெறுவார்

டெஹ்ரான், ஏப்ரல் 29 தெஹ்ரானிலுள்ள அமெரிக்க பணயக்கைதிகளை மீட்பதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சியின்போது கொல்லப்பட்ட அமெரிக்க கொமாண்டோக்களின் கருகிய சடலங்கள் ஜெருஸலம் நகரின் முன்னாள் அதிமேற்றிராணியாரிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களின் சார்பில் அவர்களின் சடலங்களைப் பெறுவதற்கு மேற்றிராணியார் இல்லோரியன் ரோமாபுரி விமான நிலையத்திலிருந்து இங்கு வருகிறார்.

ஈரான் வெளிநாட்டமைச்சரின் நெருங்கிய நண்பரான அதிமேற்றிராணியார் சடலங்களைப் பெற்றுக்கொள்ளுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் ஈரானி ஜனாதிபதி திரு பானிசதார் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் சடலங்கள் எக்காரணம் கொண்டும் அமெரிக்க அரசிடம் கையளிக்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்து அரசிடமும் வத்திக்கான் செஞ்சிலுவைச் சங்கத்திடமுமே சடலங்கள் கையளிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

---

## ஆப்கான் உதவியுடன் பாகிஸ்தானில் புரட்சி!

### பூட்டோவின் புதல்வர் முயற்சி

ராவல்பிண்டி, ஏப் 29 ஆப்கானிஸ்தான் அரசின் ஆதரவுடன் பாகிஸ்தான் ஆட்சியைக் கைப்பற்ற முன்னாள் அதிபர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் புதல்வர்கள் முயற்சி செய்து வருவதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது.

ஜுல்பிகார் பூட்டோவின் மூத்த புதல்வர் ஜுல்பிகார் மூத்தாஸா பூட்டோ தற்போது காபூலுக்கு சென்றுள்ளதாகவும் ஆப்கானிஸ்தானின் ஆதரவிலான இடதுசாரி அரசொன்றை அமைக்கவே அவர் முயன்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் மக்கள் கட்சியின் பிரிவான மக்கள் விடுதலைப்படையொன்று ஆப்கானிஸ்தானில் இயங்கிவருவதாகவும் இவ் இயக்கத்தில் ஜுல்பிகார் பூட்டோவின் அரசில் அமைச்சர்களாக இருந்த பலர் அங்கம்வகிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு)

---

## கிறிஸ்தோப்பர் நியமனம் தற்காலிகமானது!

வாஷிங்டன், ஏப்ரல் 29 அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வான்ஸ் ராஜினாமாச் செய்ததையடுத்து புதிய வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. வாரன் கிறிஸ்தோப்பரின் நியமனம் தற்காலிகமானது தான் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

திடீர் ராஜினாமாவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே இவர் தற்காலிகமாக நியமிக்கப் பட்டிருப்பதாகவும் அடுத்தவாரம் நிரந்தரமாகவே ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கைகளை வகுத்துவரும் அமெரிக்க அதிபரின் பாதுகாப்பு ஆலோசகர் திரு. பிரஸென்ஸ்கியுக்கே வெளியுறவு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில் திரு. சைரஸ் வான்ஸின் ராஜினாமாவை நேற்று திரு கார்ட்டர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது (கு)

---

## ஜனதாவின் 1வது பட்டியல்

சென்னை, ஏப்ரல் 29 தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான ஜனதாகட்சியின் முதலாவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாவது பட்டியலில் 49 பேர் இடம்பெற்றுள்ளனர். கடன் 40 பேர் கொண்ட இரண்டாவது பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்று முன்னாள் மத்தியஅமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் தெரிவித்தார். (கு)

---

## விசாரணை நடத்த கென்னடி கோரிக்கை

வாஷிங்டன், ஏப்ரல் 29 பணயக் கைதிகளை மீட்பதில் ஏற்பட்ட தோல்வி தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும் என்று செனட்டர் எட்வேர்ட் கென்னடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. கார்ட்டருக்கும் திரு. சைரஸ்வான்ஸ்ஸுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு தொடர்பாகவும் பகிரங்க அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (கு)

---




---

## 'சூரி' யரை-..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர்களும் யாழ் நகரில் ஒன்றுகூடி ஆராய்ந்தனர்.

சுமார் 4மணி நேரமாக இது பற்றி காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் இவ்விஷயமாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீ ல சு கட்சிக் குழுவொன்று திரு குமாரசூரியரையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களையும் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

---

## வேதாகமப்படி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஷேத்திரத்தின் பொருட்டு சேர்க்கப்படும் திரவியங்கள் ஒரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு உரிய உரிய வழிகளில் செலவிடப்பட வேண்டுமென்பது சாஸ்திர நிருபணம்.

வேதசிவாகம விதிப்படி கும்பாபிஷேகங்கள் நடைபெற்றால் மாதம் மும்மாரி பெய்து நாட்டின் வளங்கள் பெருகும். உரும்பராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமியின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று சிறப்புற நிறைவேற எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவடிகளை வணங்குவோமாக.

அ. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
தேங்காய்-டி.கே.பி கனகரத்தினம்-V. R. நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்‌ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
NOBODY, BUT "NOBODY" KNOWS THE TROUBLE HE'S IN
HENRY FONDA — TERENCE HILL
In
My Name is Nobody
(Scope—Color)

மனோஹரா A பார்த்தசாரதி
தினசரி 4 காட்சிகள்
சந்திரபாபு - ராஜசுலோசனா நடித்த
கவலை இல்லாத மனிதன்
Coming soon
The Living Desert

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45; 7-00 & 9-30 p.m.
MICHAEL SARRAZIN & URSULA ANDRESS in
THE LOVES AND TIMES OF
SCARAMOUCHE
Romance...Suspense...Thrill...Comedy
IN COLOR—MORE SUITED FOR ADULTS
COMING "Shark's Treasure"
—in color—

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

ரியோ (யாழ்.நகர்) போன்: 7393
Daily at 10-30 a. m., 2-15, 4-45, 7-15, 9-30 p.m.
A STAR IS BORN

REGAL
(Jaffna) Now Showing
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m
A very Funny, Naughty Comedy
REDD FOXX, PEARL BAILEY
In
M. G. M'S
"NORMAN... IS THAT YOU?"
(In color) More Suited for Adults

ராஜா - (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ மரிக்கார் ராம்தாஸ் ★ அப்புக்குட்டி ராஜகோபால்
★ உபாலி செல்வசேகரன்
மற்றும் பலர் நடித்த
கோமாளிகள் (புதிய பிரதி)
குறிப்பு
1978-ம் ஆண்டு எம். ஜி. ஆர். தலைமையில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சகல நடிக, நடிகைகளும் பங்குபற்றிய செய்திச்சுருளும் காண்பிக்கப்படும். எம் ஜி. ஆர். ராஜா படமாளிகைக்கு விஜயம் செய்துள்ளார். முதல் மந்திரியாக, புதிய திரைப்பட விழாமூலம் உங்கள் நடு நாள் ஆவல் பூர்த்தி செய்யக் காட்சி தருகின்றார்.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.


# இன்றைய பலன்

**சித்திரை மாதம் 18-ந்திகதி (30-4-80) புதன்கிழமை**

மேடம்: ஒளிக் கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும், உல்லாசமாகப் பொழுது போக்க விரும்புவீர்கள், குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு, கணவன் மனைவி மத்தியில் அன்பு தவழும்.

இடபம்: கடன் தொல்லைகள் கவலையைத் தரும், உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம், புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

மிதுனம்: பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம், ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள் பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கக்கூடும், பெரியவரின் ஆதரவு தவறாமல் கிடைக்கும்.

கடகம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும், கற்றதனால் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும், செய்தொழிலில் புதிய புத்திகளைக் கையாளுவீர்கள். சிறப்பான இடமாற்றமும் ஏற்படலாம்.

சிங்கம்: இலாபகரமான தினம், பொருள் வரவுக்குத் தாராளமாக இடமுண்டு, வணிகர்களுக்கு வியாபார விருத்தி ஏற்படும், நீண்ட நாள் எதிர்பார்த்த அரிய சந்தர்ப்பம் இன்று கிடைக்கக்கூடும், புத்திரர் புகழும் உண்டு.

கன்னி: பல வழிகளிலும் பணம் செலவாகும், நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், நடுநிலைமை நன்று.

துலாம்: இன்னலின் பின்னல் உங்களுக்குச் சோர்வைத் தரலாம், வணிகத்துறையில் நீங்கள் எதிர்பார்த்ததைவிட அற்பலாபம் கிடைக்கும். வீட்டில் குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

விருச்சிகம்: மூத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், கற்றதால் பயனும் உண்டு, ஸ்திரீ வழியாலும் மகிழ்ச்சி ஏற்படும், இன்று பொன்னான தினம்.

தனுசு: குறைகேட்க நேரிடும். கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று! உடல் நலிவு தோன்றும், பிணிக்கு இடம் கொடாது நடக்கவும்.

மகரம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும், சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

கும்பம்: உடல் நலத்தில் துரித முன்னேற்றம் காணப்படுகின்றது. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் பிறக்கும். பூமியாலும் அதிக பொருள்வரவுக்கு இடமேற்பட முடியும், சுபதினம்

மீனம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும், இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும், மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் அதிக கவனத்துடன் இருக்கவேண்டும்.

**சோதிடக் கலாநிதி**

**திருமதி**

**க. வேலுப்பிள்ளை**


ஹரன் சாவகச்சேரி
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - சாவித்திரி
நடித்த
ஜக்கம்மா


நாவற்குழி வீடமைப்புத் திட்டம்:

# வ.இ.வீடமைப்புச்சங்கத்தினர் பிரதமரைச் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை வீடமைப்புச் சங்கத்தினர் நாவற்குழியில் சுமார் இரண்டலட்சம் ரூபாவிற்கு வாங்கிய 100 ஏக்கர் காணியில் வீடமைப்பு இலாகா, மத்தியதரப்பினருக்கான வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்க இருப்பதை ஆட்சேபித்து சங்கத்தினர் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவை பேட்டிகாணவிருக்கின்றனர்.

இத்தகவலை வட இலங்கை வீடமைப்புச்சங்க செயலாளர் திரு. சி கந்தமூர்த்தி தெரிவித்தார்.

இத்திட்டத்தை ஆட்சேபித்து யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மே மாதம் 4-ந் திகதி ஆட்சேபக்கூட்டம் ஒன்று நடத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: "வடஇலங்கை வீடமைப்புச் சங்கம் 1958-ம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டு அதே ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. சங்கத்தில் 269 உறுப்பினர்கள் உள்ளனர். நாவற்குழியில் சங்கத்திற்கு அரசு 100 ஏக்கர் காணி சுவீகரித்துக் கொடுத்தது. இந்தக்காணிக்கு சங்கம் 2லட்சத்து 47ஆயிரத்து 250 ரூபா வழங்கியுள்ளது பின்னர் காணியை பிரித்து, திருத்தி பாதையமைத்து செப்பனிடசங்கம் 1லட்சத்து 5ஆயிரத்து 219ரூபா செலவிட்டது.

"71-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் இந்த 100 ஏக்கர் காணியை வடஇலங்கை வீடமைப்புச்சங்கம் பொறுப்பேற்றது. பின் 71ஆகஸ்ட் 18-ந் திகதி வீடமைப்பு ஆணையாளர் திறீன்டி பெர்னாண்டோ சங்கத்தின் 269 உறுப்பினர்களுக்கு, மனுதாரர் மூலம் தனித்தனி காணித் துண்டுகளை 4 பரப்பு விகிதம் பிரித்து வழங்கினார் காணிக்குரிய முழுப் பணத்தையும் அவர் மூலம் உரியவருக்கு செலுத்திவிட்டார்.

"இதெல்லாம் நடந்து முடிந்தபின்னர், சங்க அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் எதுவும் கொடுக்காமல வீடமைப்பு இலாகா எங்கள் காணியில் மத்தியதரப்பினருக்கான வீடமைப்புத்திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. காணித் துண்டுகளை 2 பரப்பு விதம் பிரித்து வீடுகள் கட்டவும் நடவடிக்கை எடுத்துள்ளது

"இந்த 100 ஏக்கர் காணியை அரசு சுவீகரித்து தருவதற்கான செலவையும் சங்கம் வழங்கியது. இப்பிரச்னையயிட்டு நாங்கள் விரைவில் பிரதமரை பேட்டிகாணவிருக்கிறோம். பிரதமர் இப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண்பார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார் (க)

வேலணையில் திருக்குறள் மகாநாடு:

# தமிழகப் பேராசிரியர்கள் கலந்து கொள்வர்

(வேலணை)

தமிழ்மறைக் கழகத்தின் 20வது திருக்குறள் மாநாடு மே மாதம் 29ந் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் வேலணையில் நடைபெறவுள்ளது.

மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், காரைக்குடி அழகப்பாக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் இரா. சாரங்கபாணி ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக மாநாட்டில் கலந்து கொள்வார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டின்போது தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதிய 'தமிழ்மறை விருந்து' நூலும் வெளியிடப்படும் (உ)

# 'மீனவர்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம் வழிசமைக்கிறது'

(புலோலி)

"நாட்டில் மீன் உற்பத்தியைப் பெருக்கி, பாவனையாளர்களுக்குத் தட்டுப்பாடின்றி மீன் வகைகளைப் பெற்றுக் கொடுக்கவும், கடற்றொழிலை அபிவிருத்திசெய்து மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் பல துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. கடற்றொழிலாளர்களும் இத் துரித நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை வழங்கினால்தான் கடற்றொழில் அபிவிருத்தியடைவதுடன், மீனவர்களும் சிறந்த நன்மைகளைப் பெறமுடியும்."

இவ்வாறு பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பொலிகண்டியில் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு ஏ. பிலிப் குறிப்பிட்டார்.

கடற்றொழில் பரிசோதகர் திரு எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு பிலிப் தொடர்ந்து பேசுகையில்,

"கடற்றொழிலாளர்களின் முன்னேற்றம் கருதித்தான் அரசாங்கம் இதுபோன்ற சங்கங்களைக் கரையோரப் பகுதிகளில்தான் நிறுவிவருகிறது இச்சங்கங்கள், கிராம மட்டத்திலான கடற்றொழில் அமைப்புக்கள் மூலம் கடற்றொழிலைத் துரிதமாகவும், நவீனமயமாகவும் அபிவிருத்திசெய்வதுடன், மீனவரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படும்.

"பொலிகண்டி மீனவர்களுக்கான வங்கிக் கடன் வசதிகள் போதியளவு வழங்கப்பட்டுள்ளன. பெற்ற கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தவேண்டும் அப்போதுதான் அரசாங்கம் மேலும் பல உதவிகளை உங்களுக்கு வழங்கமுடியும். பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறுபவர்கள் எதிர்காலச் சந்ததியினருக்குத் துரோகமிழைத்தவர்களாவர்" என்றார்

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

(5-ம் பக்கம் பார்க்க)


வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
அல்லி பெற்ற பிள்ளை
(புதிய பிரதி)

[illegible] (கன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 3-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷார்ப் போட்டோ கொப்பியிங் சேர்விஸ் (COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

**SHARP PHOTO**

10, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

(சுன்னுகம் மக்கள் வங்கி முன்பாக)



# ஈழநாடு The EELANAADU

50 சதம்


அந்தமான்தீவு

## நகராட்சிமன்றத் தேர்தலில் தி. மு. க. - இ. காங். பெருவெற்றி

சென்னை, ஏப். 29 அந்தமான்தீவின் போர்ட் பிளாயர் நகராட்சி மன்றத்திற்கான தேர்தலில் தி மு க-இந்திரா காங்கிரஸ் கூட்டணி சகல இடங்களிலும் வெற்றியீட்டியுள்ளது அந்தமான்தீவின் தலைநகரமான இப்பகுதியில் 90க்கும் அதிகமான வீதத்தினர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## NEW CAMBRIDGE

திருநெல்வேலிச் சந்தி

5-5-80-ல் ஆரம்பம்

G. C E (A/L) 81, 82

தாவரவியல்: திரு. சிவவீரசிங்கம்

விலங்கியல்: பிரபல ஆசிரியை

இரசாயனம்

திரு. சண்முகதாஸ் (கண்ணன்)

பௌதிகம்: பிரபல ஆசிரியர்

தூயகணிதம்- பிரயோக கணிதம்

பிரபல ஆசிரியர்

மேலதிக விபரங்களுக்கு:

V. M. PACKKIYANATHAN.


# அரசின் அநீதிகளை உலகப் அறியச்செய்ய முயல்கிறோம்

## த தொ. கூட்டணித் தலைவர் மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள் போற்றிக் கொண்டாடும் மே நாளில் இலங்கையிலுள்ள தமிழ்த் தேசிய இனத் தொழிலாளர்களுக்கு சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கங்கள் தொடர்ந்து செய்துவரும் அநீதிகளையும் கொடுமைகளையும் அவை மேற்கொள்ளும் அடக்குமுறைகளையும் அழிக்கும் முயற்சிகளையும் உலகம் முழுவதும் அறியச் செய்வதற்குத் தமிழர்விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியும் முயல்கின்றது.''

இவ்வாறு தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவரும் ஊர்காவற்றுறை எம்.பியுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் வெளியிட்டுள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அச் செய்தியில் மேலும் தெரிவிப்பதாவது;

''தமிழீழம் மீட்கப்பட்டு தம்மை நாமே ஆளும் நிலைமை உருவாகும்வரை தமிழ்த் தொழிலாளருக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் அநீதிகளையும் முற்றுமுழுதாக நீக்க முடியாது. எனவே தமிழ்த்தொழிலாளர்கள் யாவரும் ஒன்றுபட்டு தமிழ் இன விடுதலைக்கு-தமிழ்ஈழ ஆட்சியை நிறுவுவதற்கு உழைக்க வேண்டும். சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியிலுள்ள தொழிலாளர் சங்கங்களைச் சேர்வதால் பயன்பெறலாம் என்று சில தமிழ்த்தொழிலாளர் இன்றும் எண்ணுவார்களானால் அவர்கள் தமிழ் இனத்தையும், தமிழ்த்தொழிலாளர்களையும் காட்டிக் கொடுப்பவர்கள் ஆவார்கள். எங்கள் ஆட்சியை நிலைநாட்டும்வரை தமிழ்த்தொழிலாளர்களுக்கு இன, மொழி, அரசியல் அடிப்படைகளில் இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் எதிர்த்து நீதிக்கும் நியாயத்திற்கும் தமிழ்த் தொழிற் சங்கக்கூட்டணி போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டு செயற்படும்.'' (கு)

## 23 தொழிற்சங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையில் ஆரம்பமாகும். கொக்குவில் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதி, மகாத்மா காந்தி வீதி, வேம்படி வீதி ஊடாக யாழ் மத்திய கல்லூரி விளையாட்டரங்கைச் சென்றடையும், ஊர்வலம் தொடங்கும் இடத்திலும் கூட்ட அரங்கிலும், கலைநிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பொதுக்கூட்டத்தில், தமிழ்த் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், கூட்டணி எம். பிக்கள், இலங்கைத் தமிழாசிரியர் சங்க பிரதிநிதிகள், தமிழ் இளைஞர் பேரவையினர் தமிழ் மகளிர் பேரவைப்பிரதிநிதிகள் உட்படப் பலர் உரையாற்றுவர். (கெ-அ)

## (இடது)கம்யூனிஸ்ட் மேதினம் கொழும்பு-மலையக பேச்சாளர்

(யாழ்ப்பாணம்)

சீன சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மேதினக்கூட்டம் நாளை யாழ். நிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

திரு. கே. ஏ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், திரு. சுரவிட்ட தலைமையிலான தொழிலாளர் மக்கள் கட்சிப் பிரதிநிதி திரு ஏ. ஆர். எட்மன்ட், திரு. இராமநாதன் தலைமையிலான மார்க்ஸிய லெனினியக் கட்சிப் பிரதிநிதி திரு. நிஹால் டயஸ், தேசபக்த வாலிபர் இயக்க மலையகக் கமிட்டிப் பிரதிநிதி திரு. இ. தம்பையா ஆகியோரும் மற்றும் திருவாளர்கள் கே தணிகாசலம், சோ தேவராஜா, கே. செந்திவேல் உட்பட பலர் உரையாற்றுவர்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு இக்கட்சியினரின் ஊர்வலம், திருநெல்வேலிச் சந்தையிலிருந்து ஆரம்பமாகி பலாலி வீதி வழியாக பல்கலைக் கழகச் சந்திக்கு சென்றடையும் அங்கிருந்து இராமநாதன் வீதிவழியாக கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியைச் சென்றடையும், நாச்சிமார் கோவிலடியில் இருந்து கே. கே. எஸ். வீதி வழியாக சிவலிங்கப்புளியடிவரை சென்று, அங்கிருந்து ஓட்டுமடம் வீதிவழியாக, முஸ்லிம் கல்லூரி வீதி சிவலைப்பள்ளிச்சந்தி, அபூபக்கர் வீதி, வைத்தீஸ்வராச் சந்திவழியாக மானிப்பாய் வீதி, ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சாரநிலையவீதி, ஆஸ்பத்திரி வீதி, மகாத்மாகாந்தி வீதிவழியாக யாழ். நிம்மர் மண்டபத்தை நோக்கி ஊர்வலம் சென்றடையும்.

செஞ்சட்டை வீரர்களும், கட்சியின் முக்கிய உறுப்பினர்களும், பாட்டாளி, தொழிலாளவர்க்கத்தினரும் ஊர்வலத்தில் கலந்துகொள்வார்கள். (கொ)

## நவசமசமாஜக்கட்சி

(யாழ்ப்பாணம்)

கூட்டுத்தொழிலாளர் நடவடிக்கைக்குழுவின் ஐக்கிய மேதினக் கொண்டாட்டங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக நவசமசமாஜக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக யாழ். மாவட்டச் செயலாளர் திரு. ஆ. க. கண்ணுமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

''கடந்த பல மேதினங்களில் தொழிலாளர்களையும் நசுக்கப்பட்ட மக்களையும் ஒன்று திரட்டியிருக்கிறோம். கூட்டுத்தொழிலாளர் நடவடிக்கைக் குழுவின் மூலம்தான் தொழிலாளர்களையும் நசுக்கப்பட்ட மக்களையும் ஒன்றுதிரட்ட முடியுமென்று நீண்டகாலமாகப் போராடி வந்திருக்கிறோம். நவசமசமாஜக்கட்சி தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் பல கொள்கைகளை முன்வைத்ததுடன் பல போராட்டங்களையும் நடத்தியிருக்கிறது.

மே மாதத்தில் நடக்க விருக்கும் தேசிய எதிர்ப்புத்தினத்திற்கு முன்னோடியாக இருக்கின்ற இந்த மேதினம் தொழிலாளவர்க்கத்திற்கும்முதலாளித்துவ எதிர்ப்புசக்திகளுக்கும் ஒருமுக்கிய தினமாகும்! இம்முறை யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் மேதினஊர்வலம் நல்லூரர் கல்யாண மண்டபத்தில் ஆரம்பமாகும். மேதினப் பொதுக் கூட்டம் யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.''

## இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுருட்டுத் தொழிலாளர்சங்கத்தின் 16வதுவருட மேதினக் கூட்டம் நாளை தாவடியில் உள்ள சங்கப் பணிமனையில் திரு. மா.க. முதலியார் தலைமையில் நடைபெறும்.

அரசு சுருட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளது குறித்து அரசுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் அதேவேளை இதுகுறித்து மேதினக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று திரு.முதலியார் எமது நிருபரிடம் கூறினார்.

தப்பங்கடவையில் புகையிலைச் செய்கையைக்குறைத்து வேறு தானிய வகைகளை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளுவது குறித்தும்-

சுருட்டுத்தொழிலாளரின் 50 ரூபா கூலிமற்றும் சேமலாப நிதிவசூலிப்பும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். [கொ-இ]

## இன்று நடக்கும் மெய்வல்லுநர் போட்டி

(உடுப்பிட்டி)

யாழ் மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் கரணவாய், இடையாணன் ஆகிய அபிவிருத்தித் திட்டப்பகுதி மெல்வல்லுநர்ப் போட்டி இன்று கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் யாழ் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. என் நீலகண்டன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (அ)

## தமிழாசிரிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊர்வலத்திலும் கலந்துகொள்ளுமாறு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. கனக மகேந்திரா சகல ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (கொ-கு)

## வீரசிங்கம் மண்டபத்தில்

(பண்டத்தரிப்பு)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க மேதினக் கூட்டம் மே முதல்திகதி முற்பகல் 9மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் சங்கக்கிளைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள். (அ)

## செங்கொடிச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

செங்கொடிச் சங்கத்தின் மேதினவிழா மே மாதம் 1ம் திகதி காலை தலவாக்கொல்லை மல்லியப்பூ தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் திருவாளர்கள் கரவிட்ட, ரொசாரியோ பெர்ணண்டோ, ஹிக்கொட தர்மசேன, ஆ இராசையா ஆகியோர் உரையாற்றவுள்ளனர் (கொ-அ)

## குடமுழுக்குக் காண்போம்

சிதம்பர சுப்ரமண்யத் திருப்பெயர் தாங்கி, மக்கள் தம்வித மாக வெல்லாம் வேண்டிய வரங்கள் நல்கி, இதமுற நல்வாழ் வின்பத்(து) இருத்திடும் முருகன் கோயில் முதலைமை சால் குடமுழுக்கின் முறைமையைக் காண்போம் இன்றே!

—சாரதா

## திறப்பு விழா

(பண்டத்தரிப்பு)

சாந்தை சிற்றம்பல வித்தியாலயத்தில் 25 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட புதிய கட்டிடத்தை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி, திரு. தா. திருநாவுக்கரசு திறந்துவைத்தார். வித்தியாலய அதிபர் திரு. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா வைபவத்தில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா, ஆசிரியர் எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


## அதிர்ஷ்டலாபச் சீட்டு

சித்தன்கேணி கோட்டைக்கலட்டி அம்பாள் கோவில் கட்டிட நிதிக்காக 29-4-80ல் இழுக்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டு விபரம் வருமாறு;

முதற்பரிசு: இல: 3082 சைக்கிள்

இரண்டாம் பரிசு: இல: 1100 றேடியோ

மூன்றும் பரிசு: இல: 41 சுடுநீர்ப் போத்தல்

ஆறுதல் பரிசுகள்; 1073, 2464, 1120

பரிசு வழங்கப்படும் கடைசித் திகதி 7- 5- 80.

தவறினால் 9- 5- 80 மாலை 5-00 மணிக்கு உரிய பொருட்கள் மேற்படி கோவிலில் ஏலத்தில் விற்கப்படும்.

-நிர்வாகி-

இ. வீரகத்தி, கிரிமலை வீதி, சித்தன்கேணி.

5625

## NEW G.C.E. [O|L] - [A L]

★ காலை, மாலை வகுப்புகள்

**Day Classes**

புதிய வகுப்புகள்

ஆரம்பம் 5-5-80

யாழ் பிரபல முன்னணி நிறுவனம்

விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

Regd No: 12141



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் 30 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Ceneral Post office Sri Lanka uuder No CE/8948/ 78. The Felanaadu, Post Box No 49, Telefram: "Ee/anaadu' Phone:389.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org